1984 மார்ச் 27]

அளவிற்கு சூரிய விசையைப் பெற வேண்டுமானால் அதற்கு ஆகும் தொகை, எஸ்டிமேட்டட் காஸ்ட் எவ்வளவு ஆகிறது என்று தெரிந்து கொள்ள வேண்டுமென்றுதான் கேட்டேன். அந்த விவரங்களை அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மோட்டார் ஆயில் இன்ஜின் அல்லது எலக்டிரிக் பம்ப் ஆகியவற்றிற்கு ஆகும் செலவை விட குறைந்த செலவு ஆகும் என்றே கணக்கிடப்பட்டு இருக்கிறது.

தொழில் இணையத்தில் முதலீடு செய்து மானியம் பெறுவதற்கான உச்சவரம்பு.

*357—(வினா எண். 20473) திரு. சி. கணேசன் : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழில் இணையத்தில் முதலீடு செய்து மானியம் பெறுவதற்கு, உயர்ந்த பட்ச முதலீட்டுத் தொகையை அரசு வரையறுத்திருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) மற்றும் (ஆ) : தொழில் இணையத்தில் முதலீடு செய்து மானியம் பெறுவதற்கு முதலீட்டுத் தொகைக்கு உயர்ந்த பட்ச வரையறை இல்லை. தமிழகத்தில் மைய மற்றும் மாநில அரசு மூலதன மானிய திட்டத்தின்கீழ் அறிவிக்கப்பட்ட பகுதிகளில் துவங்கப்படும் தொழில்கள் அனைத்தும் அவைகளின் நிலையான மூலதனத்தில் 15 சதவீதம் அல்லது ரூ. 15 இலட்சம் இவற்றில் எது குறைவோ அதை மானியமாகப் பெறத் தகுதியுடையவையாகும். இது தவிர, இன்னும் 52 வட்டங்களில் மைய அரசு 10 சதவீத மானியம் அளிக்கிறது. இதற்கான உச்சவரம்பு ரூ. 10 இலட்சம் ஆகும்.

சிறைகளில் கைதிகள் செய்யும் வேலைக்கு ஊதியம் வழங்கும் திட்டம்.

*358—(வினா எண். 21178) திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநிலத்தில் உள்ள சிறைகளில் கைதிகள் செய்யும் வேலைகளுக்கு அரசு ஊதியம் ஏதும் வழங்குகிறதா?

(ஆ) ஆம் எனில், எந்த அடிப்படையில், எப்போது அவ்வூதியம் நிர்ணயிக்கப்பட்டது?